**அரசாங்க அறிவித்தல்.**

**முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம்.**

**தேசிய மீலாதுன் நபி விழா – 2018**

2018 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள தேசிய மீலாத் நபி விழாவினை முன்னிட்டு முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களமும், கல்வி அமைச்சின் முஸ்லிம் பாடசாலைகள் அபிவிருத்திப் பிரிவும் இணைந்து, பாடசாலை மாணவர்களுக்கிடையில் பின்வரும் பிரிவுகளில் போட்டிகளை நடாத்த தீர்மானித்துள்ளன.

1. ஆரம்ப பிரிவு:- தரம் 4,5
2. கனிஷ்ட பிரிவு :- தரம் 6,7,8
3. இடைநிலை பிரிவு:- தரம் 9,10,11
4. சிரேஷ்ட பிரிவு:- தரம் 12.13

- ஆண்களுக்கும் பெண்களுக்கும் தனித்தனியாக நடைபெறும் போட்டிகள்:- கிராஅத்,ஹிப்ழ்,பேச்சு ,கலாச்சார போட்டிகள்
- ஆண்களுக்கும் பெண்களுக்கும் பொதுவான போட்டிகள்:- கட்டுரை, சிறுகதை, கவிதை, அறபு எழுத்தணி
- ஒரு போட்டியாளர் கீழ் குறிப்பிடும் போட்டிகளில் கலாசார போட்டிகள் தவிர ஒரு போட்டியில் மாத்திரமே கலந்து கொள்ள முடியும் என்பதுடன் சிரேஷ்ட பிரிவு தவிர்ந்த ஏனைய பிரிவுகளில் தேசிய ரீதியாக கடந்த வருடம் முதலாம் இடத்தினை பெற்றவர்கள் மீண்டும் அதே பிரிவில் இப்போட்டிகளில் பங்கு பற்ற முடியாது என்பதனையும் கவனத்தில் கொள்ளவும்.

| <u>போட்டி</u> | தரம் | பிரிவு | தலைப்பு |
|---|---|---|---|
| **1. கிராஅத்**<br>(குர்ஆனை பார்த்து தஜ்வீத் முறைப்படி இனிமையாக ஓதுதல் வேண்டும்)<br>(ஆண்களுக்கும் பெண்களுக்கும் தனித்தனியாக நடைபெறும்) | 4,5 | ஆரம்ப | ஜுஸுஉ அம்ம 30ஆவது ஜுஸுஉ (جزء ثلاثين ) جزء عم<br>(10 வசனங்களுக்கு குறையாமல்) |
| | 6,7,8 | கனிஷ்ட | தபாரகல்லதி 29 ஆவது ஜுஸுஉ جزء التاسع وعشرين ( سورة الملك )<br>(12 வசனங்களுக்கு குறையாமல்) |
| | 9,10,11 | இடைநிலை | ஸுரத்துல் வாகிஆ, ஸுரத்துல் யாஸீன், ஸுரத்து ஸ்ஸஜதா, ஸுரத்துல் ஹுஜ்ராத், ஸுரத்துர் ரஹ்மான் سورة الواقعة، سورة يس، سورة السجدة، سورة الحجرات، سورة الرحمن<br>(15 வசனங்களுக்கு குறையாமல்) |
| | 12,13 | சிரேஷ்ட | ஸுரத்துர் பகரா,ஸுரத்துல் ஆலு இம்ரான்,ஸுரதுன் நிஸா<br>سورة البقرة ، سورة آل عمران، سورة النساء<br>(15 வசனங்களுக்கு குறையாமல்) |
| **2. ஹிப்ழ் குர்ஆன் (மனனப் போட்டி)**<br>(ஆண்களுக்கும் பெண்களுக்கும் தனித்தனியாக நடைபெறும்) | 4,5 | ஆரம்ப | :-ஸுரா நாஸ் தொடக்கம் ஸுரா ஷம்ஷ் வரை سورة الناس தொடக்கம் سورة الشمس வரை |
| | 6,7,8 | கனிஷ்ட | -ஸுரா நாஸ் தொடக்கம் ஸுரா ஹாஸியா வரை سورة الناس தொடக்கம் سورة االغاشية வரை. |
| | 9,10,11 | இடை நிலை | :-ஸுரா நாஸ் தொடக்கம் ஸுரா நப.:. வரை. سورة الناس தொடக்கம் سورة النبأ வரை |
| | 12,13 | சிரேஷ்ட | ஜுஸ்உ 29 تبارك الذي , ஜுஸ்உ 30 جزء عم |

| போட்டி | தரம் | பிரிவு | தலைப்பு |
|---|---|---|---|
| **3. பேச்சு**<br><br>(தமிழ்.சிங்களம்,ஆங்கிலம்,அறபு மொழிகளில் நடைபெறும்)<br>(ஆண்களுக்கும் பெண்களுக்கும் தனித்தனியாக நடைபெறும்) | 4,5 | ஆரம்ப | توقير الكبار والمسنين<br><br>முதியோர்களை மதிப்போம் මහලු අයව ගරුකරමු .Respecting the Elders<br><br>(04 நிமிடங்கள்) |
| | 6,7,8 | கனிஷ்ட | சிறுவர்களுக்கு இரக்கம் காட்டுவோம் කුඩා ළමුන්ට කරුණාව දක්වමු Let us be kind to the children<br>(05நிமிடங்கள்)<br>الرحمة بالصغار |
| | 9,10,11 | இடைநிலை | 1. “தொழுகையானது மானக்கேடான அருவருக்கத்க்க செயல்களிலிருந்து பாதுகாக்கும்”සලාත් අශිලාචාරකමින් පිළිකුල් ක්‍රියාවලින් රැක ගනියි The Prayer (Salath) prevents persons from shameful, evil and wicked deeds<br>إن الصلاة تنهى عن الفحشاء والمنكر<br>2. நபி (ஸல்) அவர்கள் அகிலத்தாருக்கோர் அருட்கொடை නබිතුමා මෙලොවට උතුම් දායාදයකි The Prophet Muhammed (PBUH) is the blessing for the whole wolds<br>وما أرسلناك إلا رحمة للعالمين<br><br>(07.நிமிடங்கள)<br>(இரு தலைப்புக்களில் ஏதேனும் ஒன்றில் தயாராக இருத்தல் வேண்டும்) |
| | 12و13 | சிரேஷ்ட | 1. வறுமை ஒழிப்பில் இஸ்லாத்தின் வகிபாகம் දිළිඳුකම තුරන් කිරීමට ඉස්ලාම් ආගමේ දායකත්වයRole of Islam in Poverty alleviation<br>دور الإسلام في القضاء على الفقر<br>2. தாய் நாட்டை கட்டியெழுப்புவதில் ஒரு முஸ்லிமின் பங்களிப்பு මව් බිම ගොඩ නැංවීමේ දී මුස්ලිම් පුරවැසියාගේ යුතුකම Role of a Muslim in “Nation Building” Activities of His/Her Mother Country<br>دور الفرد المسلم في بناء الوطن<br><br>10 நிமிடங்கள்)<br>(இரு தலைப்புக்களுக்கும் தயாராக இருத்தல் வேண்டும்) |

| போட்டி | தரம் | பிரிவு | தலைப்பு |
|---|---|---|---|
| **4. கட்டுரை**<br>தமிழ் ,சிங்களம், ஆங்கில மொழிகளில் நடாத்தப்படும்<br>(ஆண்களுக்கும் பெண்களுக்கும் பொதுவாக நடைபெறும்) | 4,5 | ஆரம்ப | நோன்பின் மாண்புகள் උපවාසයේ උතුම් බව Importance of Fasting<br>20 வாக்கியங்கள் 01 மணித்தியாலம் |
| | 6,7,8 | கனிஷ்ட | இஸ்லாம் போதிக்கும் சமத்துவம் ඉස්ලාමය පවසන සංහිඳියාව Equality in Islam<br>200 சொற்கள் 01.30 மணித்தியாலம் |
| | 9,10,11 | இடைநிலை | 1. சமூக மேம்பாட்டில் மஸ்ஜிதுகளின் பங்களிப்பு සමාජ උන්නතියට මස්ජිදිවල දායකත්වය Role of Masjid in Community Development<br>2. இஸ்லாமிய கண்ணோட்டத்தில் குடும்ப உறவு ඉස්ලාමීය දෘෂ්ටි කෝණයෙන් පවුල් ජීවිතය Preserving Family bond in Islamic View<br>(300 சொற்கள் ) 2மணித்தியாலம்<br>(இரு தலைப்புக்களுக்கும் தயாராக இருத்தல் வேண்டும்) |
| | 12,13 | சிரேஷ்ட | **1.** இஸ்லாம் கூறும் முன்மாதிரி தலைமைத்துவம் ඉස්ලාම් පවසන ආදර්ශමත් නායකත්වය **The Model Leadership in Islamic perspectives**<br>**2.** நவீன பொருளியல் பிரச்சனைகளுக்கு இஸ்லாம் முன்வைக்கும் தீர்வு කාලීන ආර්ථික ප්‍රශ්ණවලට ඉස්ලාම් ඉදිරිපත් කරන විසඳුම් **Islamic Solutions for the modern Economic Challenges**<br>(இரு தலைப்புக்களுக்கும் தயாராக இருத்தல் வேண்டும்) (400 சொற்கள் ) 2.15மணித்தியாலம் |
| **5. சிறுகதை**<br>(சிங்களம் தமிழ் மொழி மூலம் நடைபெறும்)<br>ஆண்களுக்கும் பெண்களுக்கும் பொதுவாக நடைபெறும்) | 9,10,11 | இடைநிலை | பெற்றோரை நேசிப்போம் දෙමව්පියන්ට ආදරය කරමු<br>(இஸ்லாமிய வரையறைக்குள் அமைந்திருத்தல் வேண்டும் இத்தலைப்பினை கருவாக கொண்டு )<br>(350 சொற்களுக்கு குறையாமல் இருத்தல் வேண்டும்) (3.00மணித்தியாலம்) |
| | 12,13 | சிரேஷ்ட | கடமையில் கண்ணாயிருத்தல் **රාජකාරියට කැපවෙමු**<br>(3.00மணித்தியாலம்)<br>(500 சொற்களுக்கு குறையாமல் இருத்தல் வேண்டும்) |

| | | | |
|---|---|---|---|
| **6. கவிதை**<br><br>தமிழ் மொழி மூலம் மட்டும் (ஆண்களுக்கும் பெண்களுக்கும் பொதுவாக நடைபெறும்) | 9,10,11 | இடைநிலை | கல்விக்கு ஊக்கமளித்த இஸ்லாம்<br>30 அடிகளுக்கு குறையாமல் இருத்தல் வேண்டும்<br>1.30மணித்தியாலம்<br>(இஸ்லாமிய வரையறைக்குள் அமைத்திருத்தல் வேண்டும்) |
| | 12,13 | சிரேஷ்ட | பணிவுடன் நடந்த மா நபி<br><br>60அடிகளுக்கு குறையாமல் இருத்தல் வேண்டும் 2 மணித்தியாலம்<br>(இஸ்லாமிய வரையறைக்குள் அமைத்திருத்தல் வேண்டும்) |
| **7. அறபு எழுத்தணி**<br><br>(ஆண்களுக்கும் பெண்களுக்கும் பொதுவாக நடைபெறும்) | 9,10,11 | இடைநிலை | واتقوا الله ويعلمكم الله<br><br>வெள்ளை நிற பிரிஸ்டல் அட்டையில் கறுப்பு மையினால் வரைதல் வேண்டும்.விலங்குகள் வரையக் கூடாது அலங்காரங்கள் யாவும் அறபு எழுத்தக்களாலேயே அமைய பெற்று இருத்தல் அவசியம்<br>( 3.00 மணித்தியாலம்) |
| | 12,13 | சிரேஷ்ட | ان أكرمكم عند الله أتقاكم<br><br>வெள்ளை நிற பிரிஸ்டல் அட்டையில் கறுப்பு மையினால் வரைதல் வேண்டும்.விலங்குகள் வரையக் கூடாது அழங்காரங்கள் யாவும் அறபு எழுத்தக்களாலேயே அமைய பெற்று இருத்தல் அவசியம்<br><br>( 3.00 மணித்தியாலம்) |

| போட்டிகள் | தரம் | பிரிவு | நிகழ்ச்சி | விதி முறைகள் |
|---|---|---|---|---|
| **4. இஸ்லாமிய கலாசார நிகழ்ச்சிகள்(திறந்த போட்டி)**<br><br>(இஸ்லாமிய பாரம்பரிய கலாசாரத்தை வெளிப்படுத்தும் நிகழ்ச்சிகளாக அமைதல் வேண்டும்) ஆண்களுக்கும் பெண்களுக்கும் தனித்தனியாக நடைபெறும் | 4,5 | ஆரம்ப பிரிவு ஆண்<br>ஆரம்ப பிரிவு பெண் | அறபு மொழி கஸீதா<br><br>**நபி (ஸல்) அவர்களை**<br><br>**புகழ்ந்து பாடும் கஸீதாக்கள்** | 06 மாணவர்கள் பின்னணி ஒலி, ஒளியின்றி அரபு மொழி மூலம் கஸீதா<br>(றபானை மாத்திரம் பக்கவாத்தியமாக பயன்படுத்தலாம்)<br><br>(07நிமிடங்கள்) |
| | 6.7.8 | கனிஷ்ட | இஸ்லாமிய அகீதாவுக்கு முரண்படாத பாடலுடன் களிகம்பு | 08 மாணவர்கள் (கம்பினையும் ,ஒரு மணியையும் மாத்திரமே பயன்படுத்த முடியும்) (07 நிமிடங்கள்) |
| | 6,7,8 | கனிஷ்ட பிரிவு பெண் | அரபு மொழி கஸீதாக்கள்<br><br>**நபி (ஸல்) அவர்களை**<br>**புகழ்ந்து பாடும் கஸீதாக்கள** | 06 மாணவர்கள பின்னணி ஒலி, ஒளியின்றி (றப்பானை மாத்திரம் பக்கவாத்தியமாக பயன்படுத்தலாம்)<br>(07நிமிடங்கள்) |
| | 9,10,11 | இடைநிலை (ஆண்கள் மட்டும்) | கிராமிய பாடல்களுடன் களிகம்பு | 08 மாணவர்கள் (கம்பினையும் ,ஒரு மணியையும் மாத்திரமே பயன்படுத்த முடியும்) 10நிமிடங்கள் |
| | 9,10,11 | இடைநிலை (பெண்கள் மட்டும்) | இஸ்லாமிய கருத்தொன்றை தெளிவுபடுத்தும் கதம்பம் உரைச்சித்திரம் | உரையாடலில் அனைத்து மாணவர்களும் பங்கேற்க வேண்டும் , உடல் மொழி (Body Launguage) பயன்படத்தலாம் ஆனால் நடாக பாணியில் அது இருத்தல் கூடாது. இஸ்லாமிய கலாசார ஆடை அணியலாம்<br>7மாணவிகள் (10நிமிடங்கள்) |
| | 12,13 | சிரேஷ்ட (ஆண்கள் மட்டும்) | சமூக நாடகம் (இஸ்லாமிய வரையறைக்கு உட்பட்டதாக அமைந்திருத்தல் வேண்டும்) | 11 மாணவர்கள் (போட்டியின் போது நாடகப்பிரதியினை மத்தியஸ்தர்களிடம் கையளித்தல் வேண்டும்) (15நிமிடங்கள்) |
| மேற்குறிப்பிட்ட 07 காலசார போட்டிகளில் ஒரு பாடசாலை இரு போட்டிகளில் மாத்திரமே பங்குபற்ற முடியும் என்பதனையும் கவனத்தில் கொள்ளவும் | | | | |

**பொது விதிகள்**

- அனைத்து ஆக்கங்களும் இஸ்லாமிய வரையரைக்குள் உட்பட்டதாக அமைதல் வேண்டும்
- ஆரம்ப போட்டிகள் முறையாக பாடசாலை மட்டம், வலய மட்டம், மாகாண மட்டம் என்ற ரீதியிலும், இறுதிப் போட்டிகள் தேசிய ரீதியிலும், நடைபெறும்.
- எழுத்துப் போட்டிகளில் (கட்டுரை,சிறுகதை, கவிதை , எழுத்தணி) மாகாண ரீதியில் முதலாம் இடம் பெற்ற போட்டியாளர்கள் மீண்டும் தேசிய ரீதியில் பங்கு பற்ற வேண்டும் என்பதினையும் கவனத்தில் கொள்ளவும்.
- மேற்கூறப்பட்ட விபரங்களை உள்ளடக்கிய பாடசாலைகளின் விண்ணப்பப்பத்திரங்களை அட்டவணைப்படுத்தி 12x8 அங்குல தாளில் தயாரித்து

**(பெயர் முகவரிகள் , தொலைபேசி இலக்கம் ஆங்கிலத்தில் இருப்பது விரும்பத்தக்கது)** அதனை பாடசாலை அதிபர் அத்தாட்சிப்படுத்தி மத்திய , கிழக்கு , மேல், வடமேல் ,சபரகமுவா மாகாணங்களை சேர்ந்த விண்ணப்பதாரிகள் உரிய வலய கல்விப் பணிப்பாளருக்கும் ஏனைய மாகாணங்களை சேர்ந்த விண்ணப்பதாரிகள் மாகாண கல்விப் பணிப்பாளருக்கும் **2018.05.08** ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும்.

(தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் **மீலாத் போட்டி** 2018 என குறிப்பிடவும்)

- மாகாண ரீதியாக நடாத்தப்படும் போட்டிகள் மாகாணக் கல்விப் பணிப்பாளரின் மேற்பார்வையின் கீழ் நடைபெறும். தேவைப்படும் பட்சத்தில் முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினதும், கல்வி அமைச்சின் முஸ்லிம் பாடசாலைப்பிரிவின் பணிப்பாளரினதும் ஆலோசனையை பெற்றுக்கொள்ளலாம்.
- சகல மாகாணங்களினதும் பெறுபேறுகள் **2018.07.2**3 ஆம் திகதிக்கு முன்பு திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்படல் வேண்டும்.

பணிப்பாளர்
முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம்,
180 டி.பி ஜாயா மாவத்த
கொழும்பு -10
தொலைபேசி இல:- 0112669997, 0112667909